
அமைதியும் ஆரோக்கியமும்
புதுயுகத்தின் வழிகாட்டி

அமைதி - 5 ஆரோக்கியம் - 2 செப்டம்பர் - 2017



# COCONUT OIL
# தேங்காய் எண்ணெய் சோப்பு


எண்ணம் போல் வாழ்க்கை


நட்பை விலைக்குவாங்க முடியாது
தகுதியானவர்களுக்கு
இலவசமாகவே வழங்கப்படுகிறது.
- ஹீலர் பாஸ்கர்

# அமைதியும் ஆரோக்கியமும்

புதுயுகத்தின் வழிகாட்டி

amaidhiyumaarokiyamum@gmail.com
www.amaithiyumarokiammum.com
Helpline : + 91 88838 05456




## செப்டம்பர் 2017

## பொருளடக்கம்


04 தேங்காய் எண்ணெய் சோப்பு

17 உபர் – கார்

22 காலரா, தட்டம்மைக்கு இயற்கை வைத்தியம்

23 சிறுநீரக்கல்லை கரைக்க தென்னம்பாளை வைத்தியம்

24 நுனாத்தேரும் நுங்குவண்டியும்



வெளியீடு

**கிரிஐயா பப்ளிகேஷன்ஸ்**

நெ. 69, NSK வீதி, செல்வபுரம்,
கோயம்புத்தூர் – 641 026, தமிழ்நாடு, இந்தியா.

giriiyyapublications@gmail.com
www.giriiyyapublications.com

**ஒருவருட சந்தா ரூ. 600/-**
**விலை ரூ. 50/-**


## ஆசிரியர் மடல்

அன்பு நண்பர்களே !

“பொதுமக்கள் யாரும் டி.வியைப் பார்க்க வேண்டாம், ஏனென்றால் டி.வி. தான் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே டி.வியை உடைத்தெறியுங்கள் என்றெல்லாம் கூறிவரும் ஹீலர் பாஸ்கர் அவர்கள் தற்போது திடீரென காலை 7 மணிக்கு வேந்தர் டிவியிலும் இரவு 8 மணிக்கு மெகா டிவியிலும் பேசி வருகிறார். இது முரண்பாக இருக்கிறது. ஒருவேளை ஹீலர் பாஸ்கரை இலுமினாட்டிகள் விலைக்கு வாங்கிவிட்டார்களா? என்று சிலர் கேள்வி கேட்கின்றனர்.

நண்பர்களே ! என்னைப்பற்றியும் நான் நடத்தி வரும் பயிற்சி வகுப்புகளைப் பற்றியும் முழுமையாக அறிந்தவர்கள் யாரும் டி.வி பார்க்கவேண்டாம்.

நான் டி.வியில் பேசுவது என்னைப்பற்றி தெரியாமலிருக்கும் மக்களுக்கு என்னுடைய வகுப்புகளைப் புரிய வைப்பதற்காக மட்டுமே. டி.வி. சேனல்கள் எந்த நோக்கத்திற்காக என்னை அழைத்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மக்களுக்கு நல்ல விசயங்களைப் புரியவைத்து வருகிறேன். நான் டிவியில் பேசுவதற்கு முக்கியக்காரணம் இதுதான்.

“நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே’’ என்பதைப்போல டி.வி யாரும் பார்க்ககூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். என்னைப்பற்றி முழுமையாக அறிந்தவர்கள் டிவியில் மீண்டும் பார்க்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஏனென்றால் அரைத்த மாவைத்தான் டிவியில் மீண்டும் அரைக்கிறேன். நம்முடைய ஐந்து நாள் பயிற்சி வகுப்பைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள், அமைதியும் ஆரோக்கியமும் மாத இதழை தொடர்ந்து வாசித்து வருபவர்கள் டிவியில் நான் பேசுவதைக் கேட்க வேண்டியது இல்லை.

என்னைப் பற்றித் தெரியாத மக்களுக்குத்தான் நான் டிவியில் பேசுகிறேன். மற்றவர்கள் டிவி பார்க்க வேண்டியதில்லை எனவே புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

வாழ்க வளமுடன் ! வாழ்க வையகம் !
எல்லா புகழும் இறைவனுக்கே !

ஹீலர் பாஸ்கர்



# சிறுநீரகத்தையும், தோலையும் குணப்படுத்தும் தேங்காய் எண்ணெய் சோப்பு

**ஹீலர் பாஸ்கர்**
நிறுவனர், அனாடமிக்
செவிவழிதொடு சிகிச்சை.

நண்பர்களே !

சிறுநீரகம் மற்றும் தோலில் வரும் அனைத்து வியாதிகளுக்கும் ஒரே காரணம் நமது உடலில் தேங்கும் கழிவுகள் தான். தற்போது ஊடகங்களில் விளம்பரம்செய்யப்படுகின்ற எல்லா சோப்பு வகைகளும் நமது உடலுக்குத் தீங்கு செய்பவை தான். டி.வி. பத்திரிக்கை விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு கடைகளில் நாம் வாங்கிப் பயன்படுத்தும் சோப்புகள், ஃபேட்டி ஆசிட் (Fatty Acid) எனும் பொருளால் தயார் செய்யப்படுகிறது. இந்த சோப்புகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு தோலில் உள்ள அனைத்து வியர்வை துவாரங்களும் அடைக்கப்பட்டு விடுவதால் தோலிலும், சிறுநீரகத்திலும் எண்ணற்ற வியாதிகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

உண்மையில், சோப்பு என்பது தேங்காய் எண்ணெய் கொண்டு தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இதுதான் சோப்பு. தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த பொருள் கொண்டும் தயாரிக்கப்படுவது சோப்பே கிடையாது. எனவே இந்தக் கட்டுரையின் மூலம் சோப்பைப்பற்றி பின்வருமாறு பார்க்க இருக்கிறோம்.

சோப்பு என்றால் என்ன? இந்த சோப்பு எவ்வாறு பயன்படுகிறது? தற்போது நாம் பயன்படுத்தி வரும் சோப்புகளில் உள்ள குறைபாடுகள் என்னென்ன? நல்ல சோப்பை எப்படி தயாரிப்பது? இப்போது உள்ள ஃபேட்டி ஆசிட் சோப்பு பயன்படுத்துவதால் வரும் பக்கவிளைவுகள் என்ன? ஒரு சோப்பு நல்லதா? கெட்டதா? என எப்படி சோதனை செய்து அறிவது? டி.எஃப்.எம்

(T.F.M) என்றால் என்ன? பவுடர், சன் ஸ்கீரின், கிரீம்கள் ஆகியவை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் என்ன? இவற்றையெல்லாம் நாம் எப்படி ஒழுங்குசெய்வது என்பதை சோப்பு சம்பந்தமான இந்த கட்டுரையில் அனைத்து விசயங்களையும் தெளிவாக நாம் பார்க்க இருக்கிறோம்.

சோப்பைத் தயாரிப்பதற்கு ஏதேனும் ஒரு கொழுப்பு பொருள் போதுமானது. உதாரணமாக பன்றிக்கொழுப்பு, மாட்டுக் கொழுப்பு, ஆட்டுக்கொழுப்பு, ஃபேட்டி ஆசிட் எனப்படும் பாமாயில் கழிவு மற்றும் அனைத்து விதமான எண்ணெய்கள் போன்றவற்றில் எதைக் கொண்டும் சோப்பு தயாரிக்கலாம். ஆனால் இவை எதுவும் தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்பட்ட சோப்பைப் போல் நன்மை செய்வது இல்லை.

தேங்காய் எண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சோப்பு மட்டுமே உடம்பில் உள்ள கழிவுகளை 79 சதவிகிதம் நீக்குகிறது. இதே போன்று நல்லெண்ணெயிலும் சோப்பு தயாரிக்கலாம். ஆனால் அது வெறும் ஒரு சதவிகிதம் மட்டுமே அழுக்கை நீக்குகிறது. ஃபேட்டி ஆசிட் எனப்படும் பாமாயில் கழிவான கொழுப்பில் தயாரிக்கப்படும் சோப்பு உடலில் எந்தக் கழிவுகளையும் நீக்குவதில்லை. மாறாக தோலில் உள்ள வியர்வை துவாரங்களை அடைத்து விடுகிறது. மேலும் கழிவுகள் வெளியேறுவதை தடுத்து நிறுத்திவிடுகிறது.

சூரிய காந்தி எண்ணெய், கடலை எண்ணெய் போன்ற எந்த தாவர எண்ணெய்களும், எந்த விலங்கினங்களின் கொழுப்புகளும் சோப்பு தயாரிக்க மட்டுமே உகந்தவை. ஆனால் கழிவுகளை நீக்குபவை அல்ல. தேங்காய் எண்ணெய் தவிர பிறவகையில் உள்ள எந்தக் கொழுப்பில் தயாரிக்கப்பட்ட சோப்பும் உடல் கழிவுகளை நீக்குவதில்லை. அத்துடன் தோலில் உள்ள வியர்வை துவாரங்களை அடைத்துவிட்டு கழிவுகள் உடலில் தேங்கும் வேலையைத் தான் மற்ற எல்லா சோப்புகளும் செய்கின்றன.

சொரியாசிஸ், எக்ஸிமா, ஸ்கின் டிசீஸ், போன்ற அனைத்து தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளும் தேங்காய் எண்ணெய் கொழுப்பு அல்லாமல் பிற கொழுப்பு வகையிலிருந்து தயாரிக்கப்பட்ட சோப்பைப் பயன்படுத்துவதால் வியர்வை துவாரங்கள் வழியாக கழிவுகள் வெளியேறாமல் உடலிலேயே தேங்கிவிடச் செய்வது தான். இவ்வாறு கழிவுகள் அதிகரிக்கும் நிலையில் கழிவுகளை நீக்கும் பணிகளைச் செய்யும் முக்கிய உறுப்பான சிறுநீரகமும் பாதிக்கப்படுகிறது. இதனால் சிறுநீர் சரியாக வெளியேறாமல் இருப்பது. சிறுநீரக கோளாறு ஏற்பட்டு கிரியாட்டின், யூரியா போன்றவற்றின் அளவுகள் சிறுநீரில் அதிகரிக்கத் துவங்குகின்றன. சிறுநீரகக் கற்கள் தோன்றுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. எனவே இன்று நாம் பயன்படுத்தி வரும் சோப்புகளை அது எந்த கொழுப்பு பொருளால்



தயாரிக்கப்பட்டது என்று சோதித்து அறிந்து கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்திலும், அவசியத்திலும் இருக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும்.

இன்று நாம் பயன்படுத்தும் எந்த ஒரு சோப்பானாலும் அது உடலுக்கு கெடுதலைச் செய்யும் ஃபேட்டி ஆசிட் எனப்படும் பாமாயில் கழிவினால் தான் தயாரிக்கப்படுகிறது என்பதை ஆய்வு மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு எந்த பிரபல நிறுவனத்தின் சோப்பும் விதிவிலக்கில்லை என்பது தான் உண்மை.

நமது உடலின் மேற்புறத் தோலானது வாகனங்களில் பொருத்தப்படும் புகைபோக்கி (சைலன்ஸர்) போல வேலை செய்கிறது. இதன் வழியாக கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகம் வழியாக ஒரு நாளைக்கு 1400 எம்.எல் கழிவுகளையும் நுரையீரல் வழியாக 700 எம்.எல் கழிவுகளையும் தோல் வழியாக 600 எம்.எல். கழிவுகளும், மலம் வழியாக 100 எம்.எல்.கழிவுகளுமாக ஆக மொத்தம் ஒரு மனிதனின் உடலிலிருந்து சுமார் 2800 எம்.ல் கழிவுகள் வெளியே செல்கின்றன. இந்த விபரங்களை பனிரெண்டாம் வகுப்பு 2017ஆம் ஆண்டின் விலங்கியல் பாடப்புத்தகத்தில் 8ம் பக்கத்தில் நீங்கள் பார்க்கலாம்.

இது மட்டுமன்றி தோலில் இருந்து பலவிதமான கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக அதில் இங்கு பத்துப்பொருட்கள் பட்டியலிடப்பட்டு இருப்பதைப் பார்க்கலாம்.

1.கொழுப்பு, 2. ஆவியாகும் கொழுப்பு எண்ணெய்கள், 3. அல்புமின் புரோட்டீன், 4. யூரியா, 5. லாக்டிக் அமிலம், 6. சோடியம் குளோரைடு, 7. பொட்டாசியம் குளோரைடு,
8. அல்கலைன் பாஸ்பேட் 9. சர்க்கரை, 10. அஸ்கார்பிக் அமிலம்.

மேற்சொன்னவை அல்லாமல் இன்னும் பல கழிவுகளும் சேர்ந்து ஒரு நாளைக்கு ஒரு மனிதனின் தோல் வழியாக சுமாராக 150 கிராம் முதல் 250 கிராம் அளவிற்கு வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

கழிவுகளை இவ்வாறு வெளியேற்றும் உடலுக்கு நாம் இன்று பயன்படுத்தி வரும். ஃபேட்டி ஆசிட்களால் உருவான குப்பை சோப்புகளைக் கொண்டு குளிக்கும்போது தான் அனைத்து வியாதிகளும் வருவதற்கு முக்கியக் காரணமாகிறது. பின்னர் அதை குணப்படுத்த மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ள வேண்டி மருத்துவர்களிடம் செல்கிறோம்.

நண்பர்களே ! இந்த இடத்தில் முக்கியமான இன்னொரு உண்மையையும் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். சோப்பு கம்பெனிகளுக்கான முதலாளியும், மருந்து மாத்திரை கம்பெனிகளின் முதலாளியும் ஒன்று என்பது தான் அது. அதாவது நோயை ஏற்படுத்துவதும் அவர்களே. அதற்கு சிகிச்சை என்ற பெயரில் மருந்து, மாத்திரை தருபவர்களும் அவர்களே. எனவே நாம் விழிப்புணர்வுடன் இருப்பது தான் நமது ஆரோக்கியத்தை பாதுகாக்கும்.

பக்கவிளைவுகள் (Side Effects)

தேங்காய் எண்ணெய்யில் தயாரிக்கப்படாத வேறு எந்த கொழுப்புப் பொருட்களைப் பயன்படுத்தி சோப்பு தயாரிக்கப்பட்டிருந்தாலும் அது தோல் கழிவுகளை நீக்குவது இல்லை என்பது ஒருபுறமிருக்க, அந்த சோப்பே ஒரு அழுக்கைப்போன்று உடலில் படிந்துவிடுகிறது. அதை கழுவினாலும் உடலை விட்டு போவது இல்லை. இது மட்டுமன்றி உடலின் வியர்வை துவாரங்கள் முழுவதையும் அடைத்து விடுகின்றது. அதாவது நீங்கள் உங்கள் உடலுக்கு பெயிண்ட் அடித்துக் கொள்வதும் இந்த சோப்பைப் பயன்படுத்துவதும் இரண்டுமே ஒன்றுதான். இதையடுத்து நமது உடலில் வெப்பநிலை தேவையில்லாமல் அதிகரிக்கப் செய்யும் வேலைகளை இந்த சோப்புகள் செய்கின்றன. இதனால் உடலுக்குப் பல்வேறு வியாதிகள் வருகின்றன.

நமது உடலில் இருந்து கழிவுகள் வெளியேற்றப்படாத காரணத்தினால் பித்தப்பையில் கற்கள், சிறுநீரகத்தில் கற்கள், கர்ப்பபையில் கட்டிகள் என பலவும், உடலுக்குள் தேங்கும் கழிவுகளால் ஏற்படுகின்றன. இது மட்டுமன்றி மிகமுக்கியமாக குழந்தையின்மை என்னும் குறைபாடு ஏற்படும் பாதகமான நிலைக்கு இந்த சோப்பை பயன்படுத்துவோர் தள்ளப்படுகின்றனர். இந்த செய்தியை நான் கூறுவதற்கு ஏதும் ஆதாரம் இருக்கிறதா என உங்களுக்கு எண்ணம் தோன்றலாம். ஜெர்மன் மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதற்கான ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு உண்மைகளை ஆதாரத்துடன் உலக மக்களுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றனர். இது குறித்த விபரங்கள் தி இந்து நாளிதழில் 14-5-2014 அன்று கட்டுரை வெளியாகி இருக்கிறது.

நண்பர்களே !

சோப்பிற்கான மூலப்பொருளான ஃபேட்டி ஆசிட் எனப்படுவது பாமாயிலின் கழிவு. மலேசியாவில் பாமாயில் உற்பத்தி செய்யும் அனைத்து தொழிற்சாலைகளிலிருந்தும் கிடைக்கும் கடைசி கழிவு பொருள் தான் ஃபேட்டி ஆசிட். உலக நாடுகளுக்கு இதை ஏற்றுமதி செய்வதை மலேசியா செய்து வருகிறது. இந்த பாமாயில் கழிவுகளைத்தான் மலேசியாவிலிருந்து உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டு சோப்பு கம்பெனிகளும் தங்களுக்கு தேவையான அளவு இறக்குமதி செய்து கொள்கின்றன. இதற்குப் பின்னரும்

மீதம் உள்ள பாமாயில் கழிவுகளை மலேசியாவில் என்ன செய்வது என்று தெரியாமல் அடிக்கடி தீயிட்டு கொளுத்திவிடுகிறார்கள். இதன் காரணமாகத்தான் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அவ்வப்போது புகைமண்டலங்கள் உருவாகின்றன. ஆனால் இதைப்பற்றிய உண்மைச் செய்தி டி.வி. பத்திரிக்கை போன்ற ஊடகங்களில் வெளியிடப்படுவதில்லை. அதற்குப் பதிலாக இந்தோனேஷியாவில் பரவி வரும் காட்டுத்தீ தான் இதற்குக் காரணம் என்று பொய் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

உலகின் எந்த நாட்டிற்குச் சென்றும் நீங்கள் எந்த ஒரு சோப்பையும் வாங்கிப் பயன்படுத்தலாம். அது எவ்வளவு பிரபலமான நிறுவனத்தின் தயாரிப்பாகவும் இருக்கலாம். தோல்நோயை சரிசெய்யும் என தோல் மருத்துவர்கள் அதைப் பரிந்துரைப்பதாக இருக்கலாம். அதன் நம்பகத் தன்மையை பறைசாற்றுவதற்காக அதற்கு பல சான்றிதழ்களும் விளம்பரமும், கொடுக்கப்பட்டு இருக்கலாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்கள் அதைப் பயன்படுத்துவதாகவும் இருக்கலாம். அது எந்த வகை சோப்பாக இருந்தாலும் அவை எல்லாமும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. அதாவது இவைகளுக்கான மூலப்பொருள் ஃபேட்டி ஆசிட் ஒன்றே தான். இதை வைத்து தயாரிக்கும் நிறுவனங்கள், சோப்பின் பெயர், வடிவம், வாசனை போன்றவை மட்டும் தான் வெவ்வேறானவை. அனைத்திற்கும் தயாரிப்பு முறையும், மூலப்பொருளும் ஒன்றுதான். இதைப் புரிந்து கொண்டு விழிப்புணர்வுடன் பாதுகாப்பாக இருப்போமாக!


மத்திய இடைக்கால பட்ஜெட்டில் அறிவிப்பு


சோப்பு, பற்பசை, சன்ஸ்கிரீன் கிரீம்களில் உள்ள ரசாயனங்கள் மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும்

நமது அன்பு நண்பர் திரு. ப.சிதம்பரம் எனும் உத்தமபுத்திரர் சில வருடங்களுக்கு முன்பு அறிக்கை ஒன்று வெளியிட்டார். அதைப்பற்றிய செய்தி 18.5.2014 அன்று தினத்தந்தியில் வெளியிடப்பட்டது. அந்த செய்தியில் ஃபேட்டி ஆசிட் மூலம் சோப்பு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு 7.5 சதவிகிதம் வருமான வரிவிலக்கு அளிப்பதாக திரு. சிதம்பரம் அதில் குறிப்பிட்டு இருந்தார். இதன் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து மக்களையும் நோயாளிகளாக மாற வழி வகுத்தார். அவர். செயற்கரிய இந்த விசயங்களுக்கு காரணமான திரு. சிதம்பரம் மற்றும் அவர் குடும்பத்தார் வாழ்க வளமுடன்.

நண்பர்களே !


தேங்காய் எண்ணெயில் ரூ.200க்கு தயாரிக்க வேண்டிய தூய்மையான சோப்பை ரூ.10 கொள் முதலில் வியாதிகளை ஏற்படுத்தும் ஃபேட்டி ஆசிட்டில் தயாரித்து கொள்ளை இலாபத்திற்கு மக்களிடம் விற்று பணம் சம்பாதிக்கின்றன சோப்பு நிறுவனங்கள். ஒரே நாளில் அடிக்கடி டி.வி. ரேடியோ, விளம்பரங்கள் ஒளிப்பரப்பின் மூலம் மக்களை கவர்கின்றனர். கோடிக்கணக்கில் இலாபத்தை வாரிக்குவிக்கும் இந்த நிறுவனங்களுக்கு மக்கள் நலனைப் பற்றியெல்லாம் துளியும் கவலையில்லை. இதிலும் அவர்களுக்கு இலாபமே ஏனென்றால் இந்த சோப்பை உற்பத்தி செய்து மக்களை நோயாளியாக மாற்றுபவர்களும், அதற்கு சிகிச்சை என்ற பெயரில் மருந்து மாத்திரை தயாரிக்கும் நிறுவனங்களும் இவர்களே. இதிலும் அவர்கள் பலன் அடைகிறார்கள். எனவே ஒரே கல்லில் நூறு மாங்காய் சாப்பிட்டுக் கொண்டுள்ளனர்.

**நல்லசோப், கெட்ட சோப்பு கண்டறியும் சோதனை**

தேவையான பொருட்கள் :
அடுப்பு, ஒன்றரை லிட்டர் கொள்ளளவு கொண்ட கண்ணாடி பாத்திரம், கண்ணாடி குச்சி ஒன்று, சல்ஃபூரிக் அமிலம் (கந்தக அமிலம்) ($H_2SO_4$) 15மி.லி, சோதனை செய்ய எடுத்துக் கொள்ளும் சோப்பு ஒன்று, தண்ணீர் தேவையான அளவு.

**செய்முறை விளக்கம்**

முதலில் நாம் சோதனை செய்து அறிந்த கொள்ள இருக்கும் சோப்பு ஒன்று எடுத்துக் கொள்ளவும். அதனை பீட்ரூட், கேரட் ஆகியவற்றைத் துருவப் பயன்படுத்தும் துருவியைக் கொண்டு நன்றாகத் துருவி சிறுசிறு தூளாக மாற்றவேண்டும். பிறகு அடுப்பில் கண்ணாடிப் பாத்திரத்தை வைத்து ஒருலிட்டர் தண்ணீர் ஊற்றி அதை சூடாக்கவேண்டும். தண்ணீர் நன்கு சூடேறியவுடன் தயார் செய்து வைத்திருக்கும் சோப்பு சீவலை அதில் போட்டு கண்ணாடிக் குச்சியால் அதைக் கலக்கி விட்டுக் கொண்டே இருக்கவேண்டும். சிறிதுநேரம் இவ்வாறு செய்து வரும்பொழுது சோப்பு முற்றிலுமாக தண்ணீரில் கரைந்து விடும். இதன் பின்னர் சல்ஃபூரிக் அமிலக் கரைசலில் இந்த சோப்பை பரிசோதிக்க இருக்கிறோம்.


et us note the raw materials required to prepare soap.

(I) Water - 35 ml
(ii) Sodium hydroxide (caustic soda)- 10 g
(iii) Coconut oil – 60 g

Procedure

Take 35 ml water in a beaker and dissolve 10 g of sodium hydroxide pelle in it. Allow the liquid to cool. Add 60 grams of coconut oil to this solution little by littl Stir it gently till it becomes a paste. Pour this paste into an empty match box to get th soap.

Ve use variety of soaps in our day to day life.

1. Washing soap
2. Bathing soap
3. Baby soap
4. Liquid hand washing soap

சல்ஃபூரிக் அமிலம் 15 மி.லியுடன் 85மி.லி தண்ணீரைச் சேர்த்து கலந்து வைத்துக் கொள்வது தான் சல்ஃபூரிக் அமிலக் கரைசலாகும். இந்தக் கரைசலை மிக கவனமாகத் தயார்

செய்யவேண்டும். அதாவது 85 மி.லி. தண்ணீரில் மிக மெதுவாக சல்ஃபூரிக் அமிலத்தை ஊற்றிக் கலக்கவேண்டும். ஏனென்றால் வேகமாக ஊற்றினால் அமிலம் பொங்கி வெளியே சிந்திவிடும் அபாயம் உண்டு.

தண்ணீர் கலந்து நீர்த்துவிட்ட இந்த அமிலக் கரைசலை ஏற்கனவே கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்து சூடேற்றப்பட்டுக் கொண்டு உள்ள சோப்பு கரைசலில் ஊற்றி கண்ணாடிக் குச்சியால் மெதுவாக கலக்கிக் கொண்டே இருக்கவேண்டும். சிறிது நேரத்தில் அடுப்பை அணைத்துவிட்டு பாத்திரத்தில் கண்ணாடிக் குச்சியால் கலக்குவதையும் நிறுத்திவிட்டு பொறுமையாக கவனித்தால் அந்த சோப்பில் என்னென்ன கலந்திருக்கிறார்கள் என்பதை தனித்தனியே அறிந்து கொள்ளமுடியும்.

**கலந்திருக்கும் பொருட்கள்**

சோடியம் பாமாயில், சோடியம் பனைகர்னேட், வாசனை பொருட்கள், குளோரைடு, சோடியம் குளோரைடு, ட்ரைக்ளோசன் பைஹட் டிடோடியம் எட்டா, மைக்கா / டைட்டானியம் டை ஆக்ஸைடு, கிளிசரின், சிட்ரிக் அமிலம், தண்ணீர். மேலும் பல பொருட்கள்...

இதுதான் சோப்பை பரிசோதனை செய்து அறியும் வழிமுறை. இந்த முறையில் நீங்கள் பயன்படுத்தி வரும் எந்த சோப்பு அல்லது பிரபல நிறுவனத் தயாரிப்புகளின் சோப்புகளையும் ஆய்வு செய்து அதன் உண்மை தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

டிவியில் விளம்பரம் செய்யப்படும் பிரபல நிறுவனங்களின் சோப்பில் நூற்றில் 99 சதவிகித சோப்புகள் ஃபேட்டி ஆசிட் பயன்படுத்தித்தான் தயார் செய்கிறார்கள் என்பதை மேற்கண்டவாறு ஆய்வின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம். நீங்கள் வீட்டில் இருந்தபடியே இந்த சோதனைகளை மேற்கொண்டு அறிந்து கொள்ளலாம். நீங்கள் நேரடியாக வந்தாலும் சோப்புகளைப் பற்றிய சோதனைகளை உங்கள் முன்னே செய்து காட்டப்படும். ஒருவேளை பலர் ஒன்றுசேர்ந்து அழைத்தால் உங்களது நிறுவனம், அலுவலகம், பள்ளி, கல்லூரி பொதுமேடைகள், சமூக அமைப்புகள் ஆகிய இடங்களில் உங்களுக்கு நேரடியாக இந்தப் பரிசோதனைகளை நாங்கள் செய்து காண்பிக்கிறோம்.

**சோப்பின் பட்டியலும், சோதனை முடிவுகளும்**

மருத்துவர்களால், பரிந்துரை செய்யப்படும் அனைத்து சோப்பு வகைகளும் ஃபேட்டி ஆசிட்டில் தான் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக டெர்மாடியு (Dermadew), கேட்டோ (Keto), கிளைசெப் (Glyseb) ஆகியவற்றைக் கூறலாம்.

லண்டனில் பிரபலமான சோப்பாக விளங்குகின்ற யார்ட்லி சோப்பு (Yardley



Soap) கூட தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்படுவது இல்லை.

அமெரிக்காவில் மிக உயர்ந்த ரக சோப்பு என கொண்டாடப்படும் டேபிபார் (Debibar) எனும் அதிக விலை கொண்ட சோப்பும் தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்படுவது இல்லை.

உலகில் உள்ள முன்னணி நிறுவனங்களின் சோப்புகள் எதுவுமே தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்படுவது இல்லை என்பது தான் உண்மை.

கீழ்க்காணும் பட்டியலில் நாம் கொடுத்துள்ள சோப்புகள் அனைத்தும் உங்கள் தோல் வியர்வை துவாரங்களை அடைப்பதற்கு மட்டுமே பயன்படுகின்றன. அவை கழிவுகளை நீக்குவதில்லை.

பதஞ்சலி (Pathanjali)
ஹிமாலயா (Himalaya)
ஜான்சன் & ஜான்சன்(Johnson & Johnson)
ஆயுஸ் (Ayush soap)
விமல் (Vimal)
சின்தால் (Chintol)



இவை அனைத்தும்
ஃபேட்டி ஆசிட் கலந்த சோப்புகள்

ஓல்ட் சின்தால் (Old Chintol)
மைசூர் சாண்டல் (Mysore Sandal)
மார்கோ (Margo)
லிரில் (Liril)
லிரில் 2000 (Liril 2000)
லக்ஸ் (Lux)
ரெக்ஸோனா (Rexona)
டவ் (Dove)

இதுபோன்று இப்பட்டியலில் இன்னும் ஏராளமான சோப்புகளைச் சேர்க்கலாம்.

பியர்ஸ் (Pears) சோப்பில் ஆல்கஹால், விளக்கெண்ணெய், எத்தில் ஆல்கஹால், வெள்ளைச்சர்க்கரை ஆகியவற்றைக் கொண்டு கண்ணாடியைப் போல தோற்றமளிக்கும்படி தயார் செய்கிறார்கள். இந்த சோப்பும் தோல் துவாரங்களை அடைக்கிறது. கழிவுகளை நீக்குவதும் இல்லை. எனவே இதுவும் நன்மை தரும் சோப் அல்ல.

தூத்துக்குடியில் தயாராகும் காயகல்பம் எனும் சோப்பில் 50 சதவிகிதம் தேங்காய் எண்ணெய் உள்ளது. இதில் ஃபேட்டி ஆசிட்டிற்க்குப் பதிலாக கல் போன்ற ஏதோ பொருள் ஒன்றை பவுடராக்கி உள்ளே கலக்கிறார்கள். அது என்ன பொருள் என்று பெயர் தெரியவில்லை.

சந்திரிகா சோப்பில் 50 சதவிகித தேங்காய் எண்ணெய் மற்றும் ஃபேட்டி ஆசிட் போன்று வேறு ஒருவகை அமிலம் 50 சதவிகிதமும் கலந்திருக்கின்றன.

நண்பர்களே !

இதுவரை நாம் குறிப்பிட்டிருக்கும் சோப்பு பட்டியலைப் பார்த்து இதில் சந்திரிகா சோப் மற்றும் காயகல்ப சோப்பு மட்டும் தான் சிறந்தவையோ என உங்களுக்கு எண்ணம் தோன்றிடலாம். உடனே இந்த சோப்புகளை மட்டும் வாங்கிப் பயன்படுத்தலாமா என அவசரப்பட்டு முடிவு செய்து கொள்ளாதீர்கள். ஏனெனில் இதுவரை சோதனை செய்து பார்த்ததில் மற்ற சோப்புகளைக் காட்டிலும் இந்த இரண்டு சோப்புகளில் மட்டும் தான் 50 சதவிகிதம் தேங்காய் எண்ணெய் சேர்க்கப்பட்டு தயாரிக்கிறார்கள். ஆனால் முழுவதும் தேங்காய் எண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் சோப் மட்டுமே நன்மை தரும் சோப்பாக இருக்கும். தேங்காய் எண்ணெய் 50 சதவிகிதம் மேற்சொன்ன இரண்டு சோப்புகளில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை மட்டுமே இங்கு நாம் குறிப்பிடுகிறோம். இது மற்ற சோப்புகளுடன் ஒப்பிடும் போது பரவாயில்லை எனும்படி உள்ளன. அவ்வளவே, முழுமையாக தேங்காய் எண்ணெய் கொண்டு தயாரிக்கப்படும் சோப்பு மட்டும் தான் உடலுக்கு நன்மை செய்யும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நல்ல சோப்பு, கெட்ட சோப்பு என பிரித்துப் பட்டியலிட்டதைப் பார்த்து அறிந்து கொண்ட பின்னர் சிறந்த சோப்பாக ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்து நீங்கள இனிமேல் அதைப் பயன்படுத்த துவங்கலாம். ஒருவேளை இவ்வாறு பெரும்பான்மையான மக்கள் நல்ல சோப்பைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த ஆரம்பித்தால் இலுமினாட்டிகள் அந்த நிறுவனத்தையே விலைக்கு வாங்கிக்கொண்டு வழக்கம் போல உடலுநலனுக்கு தீங்கு விளைவிக்கும் சோப்பாக அதை மாற்றி விடும் வாய்ப்பு உள்ளது என்பதையும் இந்த இடத்தில் கவனத்தில் கொள்ளுங்கள்.

எனவே நண்பர்களே! இனிமேல் சோப்பை தேர்ந்தெடுக்கும் போது கவனமாக இருங்கள். டி.வி, பத்திரிக்கை போன்ற ஊடகங்களில் விளம்பரம் செய்யப்படும், பிரபல நிறுவனங்களின் தயாரிப்புகளான உடல் நலனுக்கு கேடு செய்யும் சோப்புகளை நாம் வாங்கிப் பயன்படுத்த வேண்டாம். கடைகளில் நாம் வாங்கும் சோப்புகள் அனைத்தும் இத்தகையை சோப்புகளே.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் ஃபேட்டி ஆசிட் சோப்பினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பக்கவிளைவுகளை நாம் அறிந்து கொள்வதுடன் பொதுமக்களுக்கும் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி இவ்வகை சோப்புகளை வாங்குவதை முற்றிலும் நிறுத்தச் செய்யவேண்டும். இதற்கு மாற்றாக இயற்கையான வடிவில் கிடைக்கும் பொருட்களை குளியலுக்கு உபயோகப்படுத்தி கொள்ளலாம். சீயக்காய் பொடி, அரப்பு, கடலைமாவு, பயத்த மாவு மற்றும் நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும் மூலிகை குளியல் பொடிகளைப் பயன்படுத்தலாம்.

ஃபேட்டி ஆசிட் சோப்பு பயன்படுத்தி தலைக்கு

குளிப்பவர்களுக்கு தலைமுடி உதிர்தல் பிரச்சனை அதிகரிக்கிறது. இத்துடன் நரைமுடி எனப்படும் வெள்ளை முடி தோன்றுவதும் அதிகரிக்கிறது. எனவே இவ்வகை சோப்புகளை தலைக்கு உபயோகிப்பதையும் தவிர்க்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.



மேலும் சன்ஸ்கீரின், அழகுக்கீரிம், முகபவுடர் என எந்த பெயரிலும் உள்ள அழகு சாதனப்பொருட்களையும் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் இது முகத்தில் உள்ள வியர்வை துவாரங்களை அடைக்கும் வேலையை மட்டுமே செய்கின்றன. பவுடர் பற்றிய உண்மைச் செய்தி ஒன்றை இங்கு பதிவு செய்கிறோம். நாம் பயன்படுத்தும் முகபவுடரானது சாதாரண கல்லை 600 மைக்ரான் அளவில் தூள் செய்து அதில் விதவிதமான வாசனைத்திரவியம் சேர்த்து மணக்கும் படி செய்கிறார்கள் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

எனவே பவுடர், சன்ஸ்கீரின், கீரிம்கள் ஆகியன பயன்படுத்துவது நமது ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல என்பதைப் புரிந்து கொண்டு அவற்றைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**நல்ல சோப்பு தயாரிக்கும் முறை**

நண்பர்களே! பல ஆண்டுகளாக சோப்பைப் பயன்படுத்தி வரும் நமக்கு உண்மையில் சோப்பு எதன் மூலம் தயாரிக்கப்படுகிறது என்பது கூட தெரியவில்லை. ஆனால் ஆறாம் வகுப்பு பாடத்திலேயே சோப்பு எதன் மூலம் எப்படி தயாரிக்கலாம், என்பதைப்பற்றி விளக்கமாக கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையைப் பயன்படுத்தி நாம் வீட்டிலேயே தயாரித்துப் பயன்படுத்தலாம். மற்றவர்களுக்கும் தயாரித்துத் கொடுத்துப் பயன்படுத்தச் செய்யலாம். சிறு தொழிலாக சோப்பு தயாரித்து நாம் வியாபாரம் செய்யலாம். இதன் மூலம் ஃபேட்டி ஆசிட் மூலம் தயாரிக்கப்படும் போலி சோப்புகளை ஒழித்துவிடலாம். நமது தேவைக்கு நாமே பொருட்களைக் தயார் செய்வதன் மூலம் நாம் மீண்டும் தற்சார்ப்பு வாழ்க்கை முறைக்கு திரும்பிவிடலாம். நாம் அனைவரும் ஒன்று கூடி அதற்கான பங்களிப்பு மற்றும் உழைப்பையும் கொடுத்தால் தற்சார்பு வாழ்க்கை முறையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.




**வீட்டிலேயே சோப்பு தயாரிக்கும் முறை**

தேவையான பொருட்கள்

தண்ணீர் - 35மிலி

சோடியம் ஹைட்ராக்சைடு - 10 கிராம்

தேங்காய் எண்ணெய் - 60 கிராம்

கண்ணாடிக் குச்சி, முகவை

**தயாரிக்கும் முறை**

முகவையில் 35 மிலி தண்ணீரை எடுத்துக்கொண்டு அதில் 10 கிராம் சோடியம் ஹைட்ராக்சைடைக் கரைத்துக் குளிர வைக்கவேண்டும் அதில், தேங்காய் எண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து கண்ணாடிக் குச்சியால் நன்றாகக் கலக்கிக் கொண்டே இருந்தால் கெட்டியாவதைக் காணலாம். அதைக் காலித் தீப்பெட்டியினுள் ஊற்றி உலரவைத்தால் சோப்பு தயார். (இது ஆறாம் வகுப்பு பாடத் திட்டத்தில் உள்ளது).

**டி.எஃப்.எம் (T.F.M)**

டி.எஃப்.எம் என்பது ஒரு சோப்பின் மொத்த கொழுப்பின் அளவை நிர்ணயிக்கும் ஒரு அளவு முறை. இதில் டி.எப்.எம் அளவு 76க்கு மேல் இருந்தால் அது முதல் தர சோப்பு என்றும், டி.எப்.எம் 72 லிருந்து 76 வரை இருந்தால் அது இரண்டாவது தர சோப்பு என்றும் டி.எப்.எம் 62 முதல் 72 வரை உள்ளவைகள் மூன்றாம் தர சோப்பு என்றும் டி.எப்.எம் 62க்கு கீழ் உள்ளவை சோப்பே அல்ல என்றும் அரசு தரக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்துள்ளது.

| Total Fatty Matter (% by mass) | | | |
|---|---|---|---|
| | Brand | TFM Declared (%) | TFM Found in Test Results (%) |
| Grade 1 | Mysore Sandal | 80 | 80.67 |
| | Cinthol | 79 | 80.15 |
| | Superia Silk | 76 | 76.21 |
| | Park Avenue | 76 | 76.17 |
| | Godrej No.1 | 76 | 76.15 |
| | Godrej Fair Glow | 76 | 76.07 |
| Grade 2 | Vivel | 73 | 74.10 |
| | Margo | 71 | 71.14 |
| | Lux | 70 | 70.10 |
| Grade 3 | Hamam | 68 | 68.05 |
| | Medimix | 60 | 60.41 |
| | Lifebuoy | 60 | 60.14 |

டி.எப்.எம் 76.5 முதல் 80 வரை உள்ள சோப்புகள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என அரசு சட்டம் இயற்றி உள்ளது. அனைத்து சோப்பு நிறுவனங்களுமே இந்த விதிமுறைகளைத்தான் பின்பற்றி வருகின்றன.

தூய்மையான தேங்காய் எண்ணெய் கொண்டு தயாரிக்கும்போது டி.எப்.எம் 70 க்கு மேல் வராது என்பது கூட தர நிர்ணயம் செய்து வரும் அரசு அலுவலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் தெரியவில்லை என்பது வெட்கக்கேடு ஃபேட்டி ஆசிட்டில் சோப்பு தயாரிக்க ஒப்புதல் வழங்கும் முட்டாள் மந்திரிகளும், முட்டாள் அரசு அதிகாரிகளும் இந்த சோப்பு நிறுவனங்களின் உண்மையான முதலாளிகளான இலுமினாட்டிகளுக்காகத் தான் வேலை செய்கிறார்கள். உலகை தங்களின் சூழ்ச்சியால் ஒட்டு மொத்தமாக அழிக்க நினைக்கும் இலுமினாட்டிகளின் வியாபாரத் தந்திரம் தான் மேற்சொன்ன டி.எப்.எம் தரநிர்ணய முறை. இலுமினாட்டிகளின் வியாபாரத்தைப் பெருக்குவதற்காகத்தான் இதுபோன்ற சட்டங்களை அந்தந்த நாடுகளில் இயற்றச் செய்து மந்திரிகள், அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பொதுமக்களை பெரும் துன்பத்திற்கு ஆளாக்கி வருகின்றனர். எனவே பொதுமக்கள் தான் இவற்றிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள விழிப்புணர்வு பெறவேண்டும்.

அரசு அங்கீகாரம் செய்துள்ள டி.எப்.எம் அளவினைப் பொறுத்து உடலுக்கு நன்மை செய்யும் சோப்பு என ஒன்றை முடிவு செய்து கொள்வது சரியானது அல்ல என்பதை இதன்

மூலம் நாம் புரிந்து கொள்வோம். ஒருவேளை தேங்காய் எண்ணெய் மூலம் நல்ல சோப்பைத் தயார் செய்து அரசு அங்கீகாரத்துடன் விற்பனை செய்ய விரும்புவோர் நாம் கூறும் ஒரு வழிமுறையைப் பின்பற்றுதல் நல்லது. சோப்பில் டி.எப்.எம் அளவு 76.5க்கு மேல் இருக்கவேண்டும் என்பது அரசு நிர்ணயித்துள்ள விதி இதன்படி தேங்காய் எண்ணெய் மூலம் தயார் செய்யப்படும் சோப்பின் டி.எப்.எம் அளவு மேற்குறிப்பிட்ட அளவிற்கு மேல் வரவேண்டும் எனில் இரசாயனம் எதுவும் கலக்காமல் சோற்றுக் கற்றாழையைச் சேர்த்து சோப்பு தயாரித்தால் பரிசோதனையில் அவர்கள் நிர்ணயம் செய்துள்ள டி.எப்.எம் அளவுக்கு சரியாக காட்டி அங்கீகாரத்தைப் பெறலாம். இது வியாபாரத்தில் ஈடுபடம் விரும்பும் அன்பர்களுக்காக நாம் தரும் கூடுதல் தகவல்.

சோப்பு பற்றிய இந்த கட்டுரையை நான் எழுதுவதற்கு உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இந்த சமயத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சோப்பைப் பற்றிய பல்வேறு தகவல்களை எனக்கு அளித்து, நல்ல சோப்பு தயாரிப்பு முறைகளை எனக்கு கற்றுக் கொடுத்த மதுரையைச் சேர்ந்த திரு. ஹாஜி ஏர்வாடி இப்ராஹீம் அவர்களுக்கும் அவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்த திரு. ஹாஜி ஜெய்னுலாப்தீன் அவர்களுக்கும் இந்த வேளையில் நான் நன்றி கூற கடமைப்பட்டிருகிறேன்.

நண்பர்களே !

சோப்பு சம்பந்தப்பட்ட பரிசோதனையைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், உங்கள் பகுதிகளில் நேரடியாக இந்த பரிசோதனை மேற்கொள்வதற்காகவும் கீழ்காணும் தொலைபேசி எண்களில் திரு. ஹாஜி ஏர்வாடி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். இவரை நேரடியாகச் சென்று சந்தித்தும் சோப்பு பற்றிய பல உண்மை விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் முன்னிலையிலேயே சோப்புகளை பரிசோதனை செய்தும் காட்டுவார்.

பல பத்திரிக்கைகள், புத்தகங்களில் வெளியான சோப்பு பற்றிய செய்திகளைக் கத்தரித்து ஆதாரமாக அவர் சேகரித்து வைத்துள்ளார். சோப்பு பற்றி உண்மைகளைப் பிறருக்கு நிரூபணம் செய்ய இந்த ஆதாரங்கள் உதவிகரமாக இருக்கும். இவற்றை அனைத்தும் நகல் பிரதிகளாக (Xerox) அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் உலக மக்கள் அனைவருக்கும் நல்ல சோப்பைப் பற்றிப் புரிய வைப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். நாம் அனைவரும் மீண்டும் நல்ல சோப்பைப் பயன்படுத்த துவங்கவேண்டும்.

திரு. ஹாஜி ஏர்வாடி இப்ராஹிம் அவர்கள் தூய தேங்காய் எண்ணெயில் சோப் தயாரிப்பினை செய்து வருகிறார். உங்களுக்கு தேவைப்படும் சோப்பினை இவரிடமும் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். சோப்பு வாங்க விருப்பம் இல்லையெனில் சோப்பு தயாரிப்பதற்கு

பயன்படும் நூடுல்ஸ் எனும் மூலப்பொருளை இவரிடமிருந்து வாங்கி வந்து உங்களுக்குப் பிடித்த நறுமணத்தைச் சேர்த்து நீங்களே வீட்டில் சோப்பு தயாரித்துக் கொள்ளலாம். இதை உங்கள் சொந்த உபயோகத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது வியாபாரத்திற்காகவும் தயாரித்து விற்பனை செய்யலாம். இதுதவிர சுத்தமான சோப்பை எப்படித் தயாரிப்பது என்பது குறித்தும் இவரிடம் நீங்கள் கற்றுக்கொள்ளலாம்.

தற்சார்பு வாழ்க்கை குறித்து வாட்ஸ் அப், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் விவாதித்துக்கொண்டு இருப்பதைக் காட்டிலும் இந்த சோப்பைப் போன்று நமக்குத் தேவைப்படும் ஒவ்வொரு பொருளையும் நாமே உருவாக்க, பயன்படுத்த, விற்பனை செய்ய முன்வரவேண்டும். நல்ல பொருட்களைப் பற்றி ஆய்வு செய்து அவற்றைத் தயாரிப்பதன் மூலம் கெட்ட பொருட்களின் வியாபாரத்தைத் தடுத்துநிறுத்திவிடமுடியும்.

நாம் அனைவரும் நல்ல பொருட்களை உற்பத்தி செய்து பயன்படுத்துவதுடன் மற்றவர்களுக்கும் அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவேண்டும். நல்ல பொருட்களைப் பற்றி மக்களுக்குப் புரிய வைத்துவிட்டால் போதும். மக்கள் அதை விரும்பி வாங்கிப் பயன்படுத்துவார்கள். நல்ல பொருட்களை உற்பத்தி செய்தல், தேவைகளுக்கேற்ப நமக்கான பொருட்களைத் தயாரித்து பயன்படுத்துதல், பிறருக்கு வியாபாரம் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய தற்சார்பு வாழ்க்கை முறைக்கு நம்மை தயார்படுத்திட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை நாம் அனைவரும் உணரவேண்டிய தருணம் இது.

எனவே நண்பர்களே ! இந்த சோப்பு மட்டுமன்றி ஒவ்வொரு பொருட்களையும் இயற்கையாக எவ்வாறு தயாரிக்கமுடியும் என்பது பற்றியும் ஒவ்வொரு பொருட்களிலும் என்னென்ன கலப்படங்கள் செய்கிறார்கள் என்பது பற்றியும் விளக்கமாக எனக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் தரும் பயனுள்ள செய்திகளை ஒருங்கிணைத்து உலக மக்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்க நான் காத்துக் கொண்டிருக்கிறேன். எனவே இதுபற்றிய ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் ஆகியவற்றை நிறைவு செய்து வைத்திருப்போரும், நல்ல பொருட்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகள் பற்றி அறிந்திருப்போரும் அதுபற்றிய விபரங்களை எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.




திரு. இப்ராஹிம் அவர்களைத் தொடர்பு கொண்டு பேசுவதற்கு கீழ்க்காணும் நமது அலுவலக வாடிக்கையாளர் சேவை மைய எண்களைத் தொடர்பு கொள்ளவும்.

போன் : +91 95003 78441, 95003 78449

செழிக்கட்டும் விவசாயம்
சீர்படட்டும் சோப் நிறுவனங்கள் !
வாழ்க வையகம்! சந்தோசம்

# உபர் கார்




– ஹீலர் பாஸ்கர்

அன்பு நண்பர்களே!

உலகில் உள்ள அனைத்து கால்டாக்ஸிகளையும் அதன் ஓட்டுநர்களையும் ஒரே முதலாளியின் கீழ் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் ஒரு திட்டத்திற்கு பெயர் தான் உபர் (Uber) கார். இலுமினாட்டிகள் எனும் ஜோக்கர்களால் தான் இந்த உபர்-கார் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இந்த உபர் (Uber) கார் திட்டம் துவங்கப்பட்டது. அங்கு துவங்கப்பட்ட இந்நிறுவனம் உலகநாடுகளில் இதுவரை 600க்கும் மேற்பட்ட மிகப்பெரிய நகரங்களில் தனது திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. உபர் நிறுவனம் தற்காலத்திற்கு ஏற்ப நவீன வடிவில் இயங்குகிறது. நமது மொபைல் போன்களில் விதவிதமான ஆப்ஸ் (Apps) களை நாம் பயன்படுத்துவதைப் போன்று உபர் ஒரு ஆப்ஸ், ஆக இருக்கிறது. தேவைப்படும் எவரும் இதனை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். நகரத்தின் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பயணம் செய்ய ஒருவரின் கால் டாக்ஸி தேவையை இந்த ஆப்ஸை பயன்படுத்தினால் உபர் நிறுவனம் ஏற்பாடு செய்து கொடுக்கிறது. இதில் வேடிக்கை என்னவெனில் இந்த கால் டாக்ஸி நிறுவனத்திற்கு என்று சொந்தமாக ஒரு காரும் கிடையாது.

